[1978 ஆகஸ்ட் 31

Converting House of Bharathiar as a National Memorial.

* 6 *Q*.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the house of great poet Bharathiar at Ettayapuram has been acquired by the Government ; and

(*b*) if so, the action taken to convert the house into a National Memorial ?

பாரதியாரின் வீட்டை நினைவுச் சின்னமாக ஆக்குதல்

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) எட்டையபுரத்தில் உள்ள மகாகவி பாரதியாரின் வீடு அரசுடைமையாக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்த வீட்டை நினைவுச் சின்னமாக ஆக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) (1) எட்டையபுரத்திலுள்ள மகாகவி பாரதியாரின் இல்லத்தை தொல்பொருள் ஆய்வுத் துறை, நினைவுச் சின்னமாக பராமரிக்க அரசு எடுத்துக் கொண்டுள்ளது.

(2) எனாமலினால் செய்யப்பட்ட அறிவிப்புப் பலகைகள் (Sign Boards) நிறுவப்பட்டுள்ளன.

3) இந்த நினைவுச் சின்னத்தை தற்காலிகமாக பாதுகாக்கும் பொறுப்பு ஒரு ஸ்தபதியிடம் விடப்பட்டுள்ளது. அவர் இந்த இல்லத்தை பொதுமக்களுக்கும் பார்வையாளர்களுக்கும் பார்க்கும் வகையில் திறந்து கொடுக்கும்படி உத்தரவிடப் பட்டுள்ளது.

(4) கவி பாரதியார் எழுதிய புத்தகங்களும் அவரைப் பற்றி குறிப்புக்கள் அடங்கிய செய்தியிதழ்களும் தற்பொழுது மதுரையில் உள்ள திருமலை நாயக்கர் அரண்மனைக் கூடத்தில் சேகரித்து பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இவைகள் எட்டயபுரத்திலுள்ள பாரதியாரின் நினைவு இல்லத்திற்கு, ஒரு முழு நேர பாதுகாவலர் நியமனம் செய்யப்பட்ட பிறகு மாற்றப்படும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : அரசாங்கம் எட்டயபுரத்திலுள்ள மகாகவி பாரதியாரின் இல்லத்தை நினைவுச் சின்னமாக்கியதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்த நினைவு இல்லம் பயணிகள் பார்க்கக் கூடிய அளவுக்கு திறந்து வைத்திருக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? இந்த வீட்டை அரசு வாங்க எவ்வளவு பணம் செலவழித்தது ?

1978 ஆகஸ்ட் 31]

மேலும் பாரதியாருடைய கொள்கைகள், கோட்பாடுகள் ஆகிய வைகள் அடங்கிய புத்தகங்களை அங்கு வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்த நினைவுச் சின்னத்தை சரியான முறையில் திறந்து வைக்கவில்லை என்ற புகாரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கி ருர்கள். அதுபற்றி விசாரிக்கப்படும். அந்தக் கட்டிடத்தின் மதிப்பு ரூபாய் 6,900 என்றும், அங்கேயுள்ள நூலகத்தின் விலையின் மதிப்பு ரூபாய் மூன்றுயிரம் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

THIRU G. VASANTHA PAI : Sir, will the Hon. Minister be pleased to state whether, when the Government acquire houses of distinguished personages like the great poet Bharathiyar, they pay compensation at the rate mentioned in the Land Acquisition Act or a higher solatium to the dependants ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனிக் கேள்வியைப் போடுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : அந்த இல்லத்தை அரசுடை மையாக்கும்போது, அதற்குரிய குறிப்பிட்ட தொகையை பாரதியாருடைய வாரிசில் யார் பெற்றுக் கொண்டார்கள் ? முறைப்படியான வாரிசாக உள்ளவர்கள் பெற்றுக் கொண் டார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது பற்றி விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : மகாகவி பாரதியா ருடைய எட்டயபுரத்திலுள்ள இல்லத்தை நினைவுச் சின்ன மாக்கியதைப் போலவே, அவர் திருவல்லிக்கேணியில் வாழ்ந்த வீட்டையும் அரசுடைமையாக்குவோம் என்று நெருக்கடி காலத்தில் ஆளுநராக இருந்த திரு. சுகாதியா அவர்கள் காலத்தில் அறிவிப்பு வந்ததை அரசு அறியுமா? அவருடைய அந்த அறிவிப்பைச் செயல்படுத்த இந்த அரசாங்கம் திட்டமிட்டிருக் கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றிய விவரம் இல்லை.

Members elected from Local Authorities Constituencies

*7 *Q.*—THIRU A. BALASUBRAMANIAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to make the members who were elected to the Legislative Council from